செ.வெ.எண்: 34 நாள்: 14.01.2020

# விவசாயிகளுக்கு கதர் ஆடை அணிவித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் பொங்கல் வாழ்த்தினை தெரிவித்தார்கள்.

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் முன்னிலையில் பொங்கல் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (14.01.2020) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது.

"நன்றி மறப்பது நன்றன்று" என்ற வள்ளுவரின் வரிகளை முழுமையாக பின்பற்றக் கூடிய கலாச்சாரம் தமிழர்களுடையதாகும். அந்த வகையில் நாம் உண்ணுகின்ற உணவை உற்பத்தி செய்யும் விவசாயிகள் முதற்கொண்டு வயலிலே உழவுத் தொழில் ஈடுபடுகின்ற காளைகள் வரை அனைத்திற்கும் நன்றி செலுத்துகின்ற ஒரே பண்பாடு நமது தமிழர் பண்பாடாகும்.

இன்றைய தினம் விவசாயிகளை சிறப்பித்து இங்கே இந்த பொங்கல் விழா கொண்டாப்படுகிறது. தற்பொழுது பரவலாக பெய்துள்ள பருவமழை பயிர்கள் செழித்து வளம் பெற வழிவகை செய்துள்ளது. இதே போன்று ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளின் உற்பத்தி பெருகவும், அதனால் அனைத்து தரப்பு மக்களின் வாழ்வு வளம்பெற இந்த பொன்னான நாளில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளுக்கு கதர் ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்கள். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன் அரசு அலுவலர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துவடிவேல், மாவட்ட சுற்றுலா அலுவலர் இளங்கோ, மாவட்ட ஆட்சியரக மேலாளர்கள் கண்ணாகருப்பையா, சங்கர், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பிரபாகரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**